


தஞ்சை மத்திய மாவட்ட மாநகர தி.மு.க சார்பில் "இல்லம் தோறும் ஸ்டாலினின் குரல்", கழகத் தலைவரின் 71வது பிறந்த நாள், கழக ஆட்சியில், தமிழ்நாடு அரசின் 3 ஆண்டு சதனை, 2024 நிதி நிலை அறிக்கை விளக்கி நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி சிறப்புரையாற்றினார். உடன் மாவட்டக் கழகச் செயலாளர் துரை. சந்திரசேகரன் எம்.எல்.ஏ, கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம் எம்.பி., தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, எம்.இராமசந்திரன், து.செல்வம், மாநகரச் செயலாளர் – மேயர் சண்.இராமநாதன், ஆகியோர் உள்ளனர்.

# சிவகங்கை மாவட்டத்தில் கழகத் தலைவர் - முதல்வர் பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகள்!

சிவகங்கை. மார்ச் 4-

சிவகங்கை மாவட்டத்தில் கழகத் தலைவரும் தமிழக முதல்வருமான தளபதி பிறந்தநாளை முன்னிட்டு மாவட்டம் முழுவதும் கழகக் கொடி ஏற்றியும் இனிப்புகள் வழங்கியும் அறுசுவை உணவு வழங்கல் நலத்திட்ட உதவி வழங்கியும் கொண்டாடப்பட்டது.

**சிவகங்கை**

சிவகங்கை நகர் கழகத்தின் சார்பில் நீதிமன்ற வாயிலில் முன்பாக உள்ள அண்ணா சிலைக்கு நகர்கழக செயலாளரும் நகர் மன்ற தலைவருமான சி.எம்.துரை ஆனந்த் தலைமையில் மாவட்ட கழக துணை செயலாளர் கே. எஸ். எம். மணி முத்து மற்றும் நிர்வாகிகள் பேரறிஞர் அண்ணா சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். தொடர்ந்து சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மாவட்ட கழக துணைச் செயலாளர் கே. எஸ் .எம். மணிமுத்து ஏற்பாட்டின் பேரில்23வது ஆண்டாக மார்ச் முதல் தேதியில் பிறந்த ஆறு குழந்தைகளுக்கு1 1/2கிராம் தங்க மோதிரம் பழங்கள் வழங்கப்பட்டது. நகர் இலக்கிய அணி அமைப்பாளர் ரமேஷ் ஏற்பாட்டின் பேரில் மதுரை சாலையில் கழக கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கப்பட்டது. பஸ் நிலையம். முன்பாக கழக கொடி ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் நகர்மன்ற துணைத்தலைவர்எம்.கார் கண்ணன், நிர்வாகிகள் வீனஸ் இராமநாதன்,முத்து மணி, மகளிர் அணி மஞ்சுளா, ஜெயகாந்தன், சரவணன், விஜயகுமார், ஆறு. சரவணன் சேகர் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கார்த்தி, எஸ். எம். மதிவாணன், இளைஞரணி ஹரிஹரன், உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

சிவகங்கை தெற்கு ஒன்றிய கழகத்தின் ஏற்பாட்டின் பேரில் கழக அலுவலகமான அறிவாலயத்தில் கழக கொடியினை ஒன்றிய செயலாளர் எம்.ஜெயராமன் ஏற்றி வைத்தார். தொடர்ந்துவல்லனி, வண்டவாசி ஆகியகிராமங்களில் கழக கொடி ஏற்றி இனிப்புகளை செயலாளர் ஜெயராமன் வழங்கினார். தாய் மாற்றுத்திறனாளிகள் முதியோர் இல்லத்தில் மதிய உணவு வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய குழு தலைவர் திருமதி மஞ்சுளா பாலச்சந்தர், துணைச் செயலாளர் பஞ்சவர்ணம், நிர்வாகிகள். மனோ சுவாமிநாதன் இளைஞர் அணி தங்கச் செல்வம், மாணவணி ராம் குமார், மாவட்டம் மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் திலகவதி கண்ணன், மாவட்ட ஆதிதிராவடார் நலக்குழு அமைப்பாளர் சிங்கமுத்து இளைஞரணி நிர்வாகிகள் அழகு சுந்தரம் தங்கச்சாமி கணேசன், மகளிர் அணி துணை அமைப்பாளர் மஞ்சுளா நிர்வாகிகள் செல்வம், சுரேஷ், கருப்புசாமி, பிரவீன், செந்தில் ராஜா முருகன், தேவேந்திரன் மூக்குத்தி பாலா, பாலு, பன்னீர், முத்துக்குமார், ராசாங்கம், அய்யனார், ஜெயவேல் ,கூலு, இராமச்சந்திரன் வேல்முருகன், கொட்டகுடி வேல்முருகன், பொன்னம்பலம் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

சிவகங்கை வடக்கு ஒன்றியம் சார்பில் ஒக்கூரில் வடக்கு ஒன்றிய செயலாளர் திருமலை முத்துராம லிங்கம் தலைமையில் கழக கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் இளைஞரணி துணை அமைப்பாளர் கார்த்தி, நிர்வாகிகள் சோமசுந்தரம் தென்னரசு, முருகன், சேகர், ராமச்சந்திரன், அம்பலத்தாடி, திருமதி பத்மாவதி, மாரி, நாகராஜன், சத்தியவான், தங்கராசு ,மற்றும் பாக முகவர்கள் அவர்கள் கலந்து கொண்டார்கள்.

**இளையான்குடி**

இளையான்குடி வடக்கு ஒன்றியகழகம் மற்றும் பேருர் கழகத்தின் சார்பில் சார்பில் முக்குளி, புதூர், ரஹ்மானியாபுரம், வடக்கு அண்டக்குடி, தாயமங்கலம் ஆகிய ஊர்களில் கழக கொடி ஏற்றியும் இனிப்புகள் வழங்கியும் பள்ளி மாணவமாணவிகளுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்கப்பட்டது. முன்னாள் எம்.எல்.ஏ.வடக்கு ஒன்றிய செயலாளர் சுப. மதியரசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நிர்வாகிகள் சாரதி, இப்ராஹிம்ஷா சத்தியேந்திரன், தகவல் தொழில்நுட்ப அணி கண்ணன், சுப. அன்பரசன்,கூட்டுறவு சங்க தலைவர் சுப.தமிழரசன், விவசாய அணி காளிமுத்து, பெரியசாமி, பழனிவேல், இளைஞர் அணிஆரிப், பைரோஸ்கான், ஜெய்னுலாபுதீன், கணேசன், நீலமேகம், பாண்டி உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

முன்னதாக புக்குளியில் பள்ளி மாணவர்களுக்கு முன்னாள் எம்.எல்.ஏ. சுப.மதியரசன் இனிப்புகள் நோட்டுகளை வழங்கினார்.

இளையான்குடி கிழக்கு ஒன்றியம் சார்பில் ஒன்றிய செயலாளர் வே.தமிழ்மாறன் தலைமையில் சூராணத்தில் கழக கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கப்பட்டது. இளையான்குடி மேற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் கீழநெட்டூரில் ஒன்றிய கழகச் செயலாளர் காவெங்கட்ராமன் தலைமையில் அரசு பள்ளி மாணவ மாணவிகளுக்கு நோட்டு பேனா புத்தகங்கள் இனிப்புகள் வழங்கப்பட்டது.

**காரைக்குடி**

காரைக்குடி நகரில் 27 வார்டுகளிலும் கழக கொடி ஏற்றிஇனிப்புகள் வழங்கியும், பள்ளி மானவ மாணவிகளுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்கியும் அன்புவனம் முதியோர் இல்லத்தில் மதிய உணவு வழங்கப்பட்டது. மருத்துவமுகாமும் நடைபெற்றது. நகர்கழக செயலாளர் என். குணசேகரன் தலைமையில் நகர் மன்ற தலைவர் எஸ். முத்துதுரை முன்னிலையில் நடைபெற்றது.

ஈரோடு தெற்கு மாவட்டத்தில் – முதல்வர் பிறந்தநாள் – அரசின் சாதனை–

# நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம்: கனிமொழி கருணாநிதி எம்.பி. சிறப்புரை!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் சு.முத்துசாமி அறிக்கை



ஈரோடு, பிப்.4-

ஈரோடு தெற்கு மாவட்டத்தில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 71வது பிறந்த நாள் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் இன்று நடைபெறுகிறது. இதில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார் என்று மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் சு.முத்துசாமி தெரி வித்துள்ளார்.

இது குறித்து ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளர் சு.முத்துசாமி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி அவர்களின் பிறந்த நாளை நாம் அனைவரும் சீரிய வகையில் கொண்டாடும் விதமாக திராவிட மாடல் அரசின் சாதனைகள் மற்றும் அரசின் நிதிநிலை அறிக்கை விளக்கும் வகையில் எல்லோருக்கும் எல்லாம்" என்ற பொதுக்கூட்டம் இன்று (04.03.2024 திங்கட் கிழமை) மாலை 05.00 மணியளவில் ஈரோடு காளை மாட்டு சிலை, சிம்னி ஹோட்டல் அருகில் நடைபெறவுள்ளது.

இதில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கலந்துகொண்டு சிறப்புரையாற்றவுள்ளார்.

எனவே, இந்நிகழ்ச்சியில் ஈரோடு தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு மற்றும் அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், சிறப்பு அழைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழகத்தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

சே.முத்துத்துரை தலைமை! நா.குணசேகரன் வரவேற்புரை! நிதி நிலை அறிக்கையை விளக்கி

# காரைக்குடி நகர தி.மு.க. சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம்!

## கே.ஆர்.பெரியகருப்பன் - மு.தென்னவன் - சென்னை அரங்கநாதன் சிறப்புரை!

காரைக்குடி, மார்ச் 4-

காரைக்குடி நகர தி.மு.க. சார்பில் "எல்லோருக்கும் எல்லாம் திராவிட மாடல் நாயகர்" மு.க.ஸ்டாலின் அவர்க ளின் 71ஆம் பிறந்த நாள் விழா மற்றும் நிதி நிலை அறிக்கை விளக்கப் பொதுக்கூட்டம் இன்று (4.3.2024 திங்கள்) மாலை 5 மணியளவில் காரைக்குடி ஐந்து விளக்கு அருகில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு நகர்மன்றத் தலைவர் சே.முத்துத்துரை தலைமையும் நகரச் செயலாளர் நா. குணசேகரன் வரவேற்புரையும் ஆற்றுகின்றனர்.

சுப.துரைராஜ், சன் சுப்பையா, உதயம் ராசு, லெட்சுமி ராஜ் கணேஷ், பெரி வயிரவன் சே.சொக்கலிங்கம், அன்பு ஏ.சேவியர், போஸ் .குணசேகரன், குழ. ஜான் கென்னடி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இபொதுக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், சென்னை அரங்க நாதன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் த.சேங்கைமாறன், ஜோன்ருசோ, மணிமுத்து, பா. செந்தில்குமார், பா. கணேசன், பெரி பாலமுருகன், சுப.சின்னத்துரை, கே.ஆர்.ஆனந்த், பூபாலசிங்கம், ஆர்.ரவி, லெ.மு. ரவிச்சந்திரன், நா. நெடுஞ்செழியன், சொர்ணம் அசோகன், துரை கணேசன் உள்ளிட்ட கழகத்தினர் திரளாகப் பங்கேற்கின்றனர்.

சொ.கண்ணன் நன்றி கூறுகிறார்.







மயிலாடுதுறை புதிய மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத் திறப்பு விழா

மற்றும்

மயிலாடுதுறை, திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களின் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல், நிறைவுற்ற திட்டப்பணிகளைத் திறந்து வைத்தல் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள்

புதிய மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தைத் திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, நிறைவுற்ற திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்து மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி விழாப் பேருரையாற்றுவார்கள்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,
சீர்மிகு பெருமக்கள் பங்கேற்றுச் சிறப்பிப்பார்கள்.

நாள் : 4.3.2024, திங்கட்கிழமை, காலை 10.00 மணி
இடம் : மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம், மன்னம்பந்தல், மயிலாடுதுறை

சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப.,
தலைமைச் செயலாளர்



ரூ.114.48 கோடியில் தரைத்தளம் மற்றும் 7 தளங்களுடன் 82,883.9 சதுர அடி பரப்பளவில் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்.



நாகப்பட்டினம் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி.

செ.ம.தொ.இ./341/வரைகலை/2024

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-600 009